

கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (15.4.2026) காணொலிக் காட்சி வாயிலாக ஒன்றிய பா.ஜ.க. அரசு நாளை நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக கொண்டு வரப்போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றுவது குறித்து கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளருக்கு எதிராக

# அ.தி.மு.க.வினரே ஒட்டிய சுவரொட்டியால் பரபரப்பு!

சிவகங்கை, ஏப். 17.

வருகிற 23ம்தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் பி .ஆர். செந்தில்நாதன் சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக போட்டியிடுகிறார் .

இவரை எதிர்த்து சிவகங்கை மாவட்டம் மற்றும் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி நகர் முழுவதும் அ.தி.மு.கவில் ஆரம்ப காலத்தில் முன்னோடிகளாக இருந்து கட்சியை வளர்த்த முன்னாள் எம்.எல்ஏக்கள் மாவட்ட செயலாளர் கே.ஆர்.முருகானந்தம், சோழன், பழனிச்சாமி, மருது அழகுராஜ்,எஸ்.பி கருப்பையா, கல்லல்கே ஆர். அசோகன் ஆகியோருக்கு அ.தி.மு.க மாவட்ட செயலாளர் செந்தில்நாதன் துரோகம் செய்ததால் அவர்கள் கட்சியை விட்டு வெளியேறினார்கள்.

பணம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல் பட்டு வரும் இத்தகைய துரோகச் செயலில் ஈடுபட்ட செந்தில் நாதனுக்கு இந்த தேர்தலில் அ.தி.மு.க.வினர் வாக்களிக்கக் கூடாது. என்ற சுவரொட்டி தொகுதி மற்றும் மாவட்டம் முழுவதும் ஒட்டி உள்ளார்கள் . இதனால் அ.தி.மு.க. தொண்டர்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் தொகுதி மறுவரையறை மசோதாவைக் கண்டித்து – சென்னை – கோபாலபுரத்தில் – முத்தமிழறிஞர் கலைஞர் இல்லம் முன்பு, ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் – திருமதி செல்வி செல்வம் அவர்கள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டார். டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் மா.பா. அன்பு துரை உள்ளிட்ட கழக முன்னணியினர் பலரும் இதில் கலந்துகொண்டார்கள்

## களத்தில் இளைஞர் அணி

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:**





பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி, தேனி வடக்கு மாவட்டம்.





பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி, கோவை தெற்கு மாவட்டம்.





மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, ஈரோடு தெற்கு மாவட்டம்.





குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி, வேலூர் தெற்கு மாவட்டம்.





நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி, நாகப்பட்டினம் மாவட்டம்.





எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, சென்னை கிழக்கு மாவட்டம்.





ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, சேலம் மத்திய மாவட்டம்.





திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி சென்னை வடகிழக்கு மாவட்டம்.





சங்ககிரி சட்டமன்றத் தொகுதி, சேலம் மேற்கு மாவட்டம்.